தொகுதி- ருஎ :: பகுதி-ரு — Vol. 57 :: No. 5

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1992
பிலவ—ஆவணி
AUGUST — 1961

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 21—9—61)

**உள்ளுறை**

1 வழுக்காத்தல்
வித்துவான் கு. மா. திருநாவுக்கரசு 129
2 பழமுதிர்சோலை
கி. பழநியப்பன், மதுரை. 139
3 இளம்பூரணர் எழுத்துரை
ஆ. சிவலிங்கனார், மயிலம். 144
4 தாகூர் நெறியது காணீரோ
"அதிரை இளஞ்சித்தன்" 152
5 தமிழ் இலக்கிய வாயில்
அ. கி. பரந்தாமனார், எம். ஏ., மதுரை.
6 நச்சினார்க் இனியரும் மெய்ம் மயக்கமும்
மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட்., 159

---

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L. C.

2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை து. துரைச்சாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர், திரு, மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph D. சென்னை.

4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வீ. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழனியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி. ருஎ<br>Vol. 57 | திருவள்ளுவர் ஆண்டு 1992<br>பிலவ — ஆவணி<br>1961 — August | பகுதி. ரு<br>No. 5 |
| --- | --- | --- |

**சொல் விளக்கம்: 2 (இ)**

# வழக்காத்தல்

(கு. மா. திருநாவுக்கரசு)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**செலவு முதலிய நான்கிற்கு இடவழா நிலை,**

'வினையில்......' என்னும் நூற்பாவில் பொதுவகை யான் இடவழாநிலை யுணர்த்திய தொல்காப்பியர், சிறப்பு வகையான் சிலசொற்களை எடுத்துக்கூறி அவை இன்னின்ன விடத்திற்குரியன எனக் கூறுமுகத்தான் வழுக்காக்கின் றுர்.

செலவு, வரவு, தரவு, கொடை என்னும் நான்கு சொற் களும் தம் முதனிலையாலே தாம் இன்னவிடத்திற்குரியன என்பதை யுணர்த்துந் தன்மையன. ஆனல் தமிழிலுள்ள ஏனைய வினைச் சொற்களெல்லாம் பால்காட்டும் விகுதியால் இடமுணர்த்துந் தன்மையன. இந்நான்கும் விகுதியின் துணை வேண்டாமலே பகுதியாலே இடமுணர்த்துவன. "தரவு, வரவு என்னும் இரண்டும் தன்மை, முன்னிலை ஆகிய

ஈரிடங்கட்கு முரிய'' என்றும், 'செலவு, கொடை என்னும் இரண்டும் படர்க்கையிடத்திற்குரிய'' என்றும் கூறியுள்ளார்.

(1) செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்று மங்காற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூவிடத்து முரியஎன்ப. (28)

(2) அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிருகிளவியும்
தன்மை முன்னிலை யாயிரிடத்த (29)

(3) ஏனையிரண்டும் ஏனையிடத்த (30)

**மே-ள்:** தரவு, வரவு

தன்மை முன்னிலை

**எனக்குத் தந்தான் நினக்குத் தந்தான்**
**என்னுழை வந்தான் நின்னுழை வந்தான்**
**ஈங்கு வந்தான்** [1]

**செலவு, கொடை**

படர்க்கை

**அவன்கட் சென்றான், அவற்குக் கொடுத்தான்,**
**ஆங்குச் சென்றான்** [1]

**இந்நான்கு பற்றி வரும் வாய்பாடுகள்:**

(1) முற்று — சென்றான் முதலியன.
(2) பெயரெச்சம் — சென்ற முதலியன.
(3) வினையெச்சம் — சென்று முதலியன.

---

[1] ஈங்கு – தன்மைக்குரியது என்றும், ஆங்கு – படர்க்கைக் குரியது என்றும் சேனாவரையர் கூறுகின்றார்.

(4) தொழிற் பெயர் — செல்லுதல் முதலியன.

இவ்வாறு வரும் எல்லா வாய்பாடுகளிலும் செலவு முதலிய நான்கும் தத்தமக்குரிய இடங்களிலேயேவரும் எனக் கொள்க.

இவை நான்கும் இன்னின்ன விடத்திற்குரியன என்பதற்குச் சேனாவரையர் கூறுங் காரணங்கள்:—

(1) "தரப்படும் பொருளை ஏற்பான் தானும் முன்னின்றானும் ஆகலானும், வரவு தொழில் தன்கண்ணும் முன்னின்றான்கண்ணும் சென்று முடிதலானும் தரவு, வரவு இரண்டும் ஈற்றானன்றித் தன்மை, முன்னிலைக்குரிய வாயினவாறு காண்க."

(2) "செலவு தொழில் படர்க்கையின்கண் சென்றுறுதலானும் கொடைப் பொருளேற்பான் படர்க்கையான் ஆகலானும் செலவு, கொடை யிரண்டும் ஈற்றானன்றிப் படர்க்கையிடத்திற்குரிய வாயினவாறு காண்க."

# இடவழுவமைதி

"இந்நான்கில் தரவும், வரவும் படர்க்கையிடத்தில் வந்தால் அதனை வழுவமைதியாகக்கொள்க" எனக் கொண்டு, அதற்கு மேற்கோளாக,

தரவு — "பெருவிறலமரர்க்கு வென்றிதந்த"

வரவு — "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது"

என்பனவற்றைக் கூறுகின்றார் சேனாவரையர். இவ்வழுவமைதியை 28ஆவது நூற்பாவில் வந்துள்ள "அம்மூவிடத்துமுரிய" என்ற தொடராற்கொள்க என்கின்றார்.

இனி,

கொடை, செலவு இரண்டனுள் கொடை என்பதற்கு மட்டும் எச்சவியலில் இடவழுவமைதியாக ஒரு நூற்பா கூறுகின்றார் தொல்காப்பியர்.

''ஈ, தா, கொடு என்னும் மூன்றனுள், கொடுவென்னுஞ்சொல் இரக்கப்படுவோனினும் உயர்ந்தோன் கூற்று'' என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

இதற்கு மேற்கோள்:— 'சாந்து கொடு'' என்பது. இங்கு (எனக்குச்) சாந்து கொடு என உயர்ந்தவன் ஒருவன் அவனிலும் தாழ்ந்த ஒருவனைப் பார்த்துக் கேட்பதாகக் கொள்ளப்படுகின்றது. இதில், கொடைப் பொருள் தன்மைக்கண் வந்துள்ளதே! கிளவியாக்கத்தில் அஃது 'அவனுக்குக் கொடு' எனப் படர்க்கைக்குரியதாகவன்றே கூறியுள்ளாரெனின், உயர்ந்தோன் தன்னிற்றாழ்ந்தவனிடத்து எனக்குக் கொடு எனக் கேட்டவழி, தன்னை வேறொருவனாக (படர்க்கையாக) நினைத்து, எனக்குக் கொடு என்றனாகலின் கொடுவென்னும் படர்க்கைச் சொல் கருத்து வகையால் படர்க்கையோடியைந்ததாகவே கொள்ளப்படும். சொல்வகையால், படர்க்கைக்குரிய கொடுவென்பது தன்மைக்குரிய எனக்கு என்பதனோடியைந்தது இடவழுவமைதி எனக்கொள்க.

> கொடுவென் கிளவிபடர்க்கையாயினும்
> தன்னைப் பிறன்போற் கூறுங்குறிப்பிற்
> றன்னிடத்தியலு மென்மனார் புலவர் (448)

**எல்லாம் என்னும் விரவுப்பெயர்**

''எல்லாம் என்னும் பெயர் இரண்டு திணைக்கண்ணும் புன்மை குறித்துவரும்'' எனப் பெயரியல் 32–ஆவது நூற்

பாவிற் கூறுகின்றார்.

எல்லா மென்னும் பெயர்நிலைக்கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே (186)

(மே-ள்) 1) எல்லாம் வந்தேம் - (தன்மை-உயர்திணையாகலின்) இஃது உயர்திணைக்கு

2) எல்லாம் வந்தன - இஃது அஃறிணைக்கு.

[இந்நூற்பாவினடியிற் காட்டப்பட்டுள்ள - எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார் என்பனவற்றை எடுத்துவிடுதல் நலம்.]

அடுத்த நூற்பாவில்— "எல்லாம் என்னுஞ் சொல் உயர்திணைக்கண் வரும்போது தன்மைப் பன்மைக்கு மட்டும்வரும்; உயர்திணை குறிக்கும் முன்னிலைப் பன்மைக்கும், படர்க்கைப் பன்மைக்கும் வாராது" எனத் தொல்காப்பியர் கூறுவதாகச் சேனாவரையர் கருதுகின்றார்

"தன்னுளுறுத்த பன்மைக்கல்லது [1]
உயர்திணைமருங்கி னாக்கமில்லை" (187)

இனி,

'எல்லாச் சான்றோரும்' என உயர்திணைப் படர்க்கையிடத்தும் வருகின்றதேயெனின், அவ்வாறு வருவதை இடவழுவமைதியாகக்கொள்க என்கின்றார் சேனாவரையர். அஃதாவது, "எல்லாம் என்னும் விரவுப்பெயர் உயர்திணைக்கண் (தன்மையிடத்துமட்டும்) எல்லாம் வந்தேம் என்றும், அஃறிணைக்கண் எல்லாம் வந்தன என்றும் வருவதை வழாநிலையாகவும், உயர்திணைக்கண் ஏனையிடத்து- 'எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார், என வருவதை வழுவமைதியாகவும் கொள்க" என்பது சேனாவரையர் கருத்து.

---

[1] இதுபற்றிய இளம்பூரணர் கருத்து வேறு. அது பின்னர்த் தனித்தலைப்பில் விளக்கப்படும்.

இனி,

ஆக்கமில்லை = பெருக்கமில்லை (பெரும்பாலுமாகாது) என்பது பொருளாகலின் சிறுபான்மை, எல்லாம் என்னும் சொல் உயர்திணைக்கண் முன்னிலை, படர்க்கையாகிய ஏனையிடத்திற்குமுரித்து என்பாருமுளர் எனப் பிறர் கூற்றாகக் கூறி, ஏனையிடத்து வருவதையும் வழாநிலையாகக் கொள்ளலாம் என்கின்றார் சேனாவரையர்.

## புறனடை நூற்பாவிற் கூறப்படும் இடவழுவமைதி

''இவ்வதிகாரத்திற் கூறப்படாத இலக்கணங்கள் உளவாயின், அவற்றை இவ்வதிகாரத்திற் கூறப்பட்ட இலக்கணங்களைக்கொண்டு அமைத்துக்கொள்க'' என்ற கருத்தில்-

செய்யுள் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவியெல்லாம்
பல்வேறு செய்தியின் நூனெறி பிழையாது
சொல்வரைந்தறியப் பிரித்தனர்காட்டல்' (463)

எனக் கூறுகின்றார் தொல்காப்பியர். அதற்குச் சேனாவரையர், தொல்காப்பியர் முன் கூறிய இலக்கணப் பகுதிகளை மனத்துட் கொண்டு அவர் கூறாத சிலவற்றை யெடுத்துக் காட்டுகின்றார்: அவற்றில் பெரும்பாலன இடவழுவமைதியாக வருவனவாதலின் அவற்றை இங்கு விளக்குவோம். முதலில் தொல்காப்பியர் இதுபற்றிக் கூறியதை நினைவு கொள்வோம்.

வினைச்சொற்களினுறுப்புக்களில் இடமுணர்த்துந் தகுதியையுடையன பாலுணர்த்தும் எழுத்துக்களே (விகுதிகளே) யாம். தன்மைப்பன்மைவினைக்குரியன

அம், ஆம், எம், ஏம், டும், கும், தும், றும் என்னும் எட்டு மாம்.

> "அவைதாம்,
>
> அம், ஆம், எம், ஏம் என்னும் கிளவியும்
> உம்மொடுவரூஉங் கடதற வென்னும்
> அந்நாற்கிளவியொ டாயெண்கிளவியும்
> பன்மையுரைக்குந் தன்மைச் சொல்லே" (202)

எனக் கூறுகின்றார் தொல்காப்பியர்.

இங்கு நாம் ஒன்றை நினைவுகொள்ள வேண்டும். ஒருவன் 'யாம் உண்டனம்' எனக் கூறுகின்றானெனின் அவன் தன்னை உயர்த்திக் கூறும் முறையில் தன்னைப் பன்மை வாய்பாட்டாற் கூறவேண்டும். இல்லையெனின், முன்னிலையிலிருப்பவர்களையாவது படர்க்கையிலுள்ளவர்களையாவது உளப்படுத்தித் (சேர்த்துக்கொண்டு) தன்மைப் பன்மை வாய்பாட்டாற் கூறவேண்டும். ஏனெனின், "தனக்கு ஒருமையல்லது இன்மையின், தன்மைப் பன்மையாவது தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாம்" எனச் சேனாவரையர் கூறியதைக்காண்க. ஆனால், தன்மைப் பன்மைக்குரிய விகுதிகளெட்டுமே முன்னிலை, படர்க்கையாகிய ஈரிடத்தாரையும் உளப்படுத்தும் ஒன்றோ, இவை யிவை இன்னின்னவிடத்தாரை யுளப்படுத்தும் என்றோ தொல்காப்பியர் கூறவில்லை. ஆனால் "தன்மைப் பன்மை வினைச்சொல் தன்மைப் பெயருக்குமட்டும் (உயர்திணைக்கே) பயனிலையாகாது, அத்தன்மைப் பெயருடன் அஃறிணைப் பெயரும் எண்ணுப் பொருளில் இணைந்துவரின் அவ்வஃறிணையாகிய படர்க்கை பெயருக்கும் பயனிலையாய்த் திரிந்துவரும்" என்று ஓரிடத்திற் கூறுகின்றார்.

"அவற்றுள்

பன்மையுரைக்குந் தன்மைக்கிளவி
எண்ணியன் மருங்கின் திரிபவையுளவே'' (209)

என்பது நூற்பா.

மே-ள். ''யானுமென்னெஃகமுஞ்சாறும் என்பது. இவ்வாறு வருதல் வழுவாயினும் அமைக என்பதுபடக் கிளவியாக்கத்தில்,

''தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவி
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்'' (43)

என வழுவமைக்கின்றதையும் அறிக.

இதனைத் தவிர வேறு முறையில் தன்மைப் பன்மைச் சொல் உளப்படுத்தியமைப்பதைப் பற்றித் தொல்காப்பியர் கூருததால் சேனாவரையர் அவை பற்றித் தெளிவாக விளக்குகின்றார்.

முதலில் இன்னின்ன விகுதிகள் இன்னின்ன விடங்களை யுளப்படுத்தும் எனக் கூறுகின்றார்.

''அம், ஆம் — முன்னின்றாரையும், தமராயவழிப் படர்க்கையாரையும் உளப்படுத்தும்.
எம், ஏம் — படர்க்கையாரை யுளப்படுத்தும்.
கும் முதலியன - அவ்விருவரையும் ஒருங்கும், தனித்தும் உளப்படுத்தும்.''

என வினையியல் - 5 ஆம் நூற்பாவிற் கூறி, இவற்றையெல்லாம் புறனடையாற் கொள்க என்னும் முறையில் புறனடை நூற்பாவின் கீழ் –

''ஏனை யிடத்திற் குரிய சொல் தன்மையோ
டியைந்த வழித் தன்மையான் முடியும்''

எனக் கூறி, 'யானு நீயுமவனுஞ் செல்வேம்' 'யானு நீயுஞ் செல்வேம்' என மேற்கோள் காட்டிச் செல்கின்றார்.
மேலும் சேனாவரையர் இறுதி நூற்பாவிற் கூறும் சில இட வழுவமைதிகளைக் காண்போம்.

(அ) படர்க்கைச் சொல் முன்னிலையோடியைந்தவழி முன்னிலையான் முடியும்.
மே-ள் = "அவனு நீயுஞ் சென்மின்".

இங்கு, கிளவியாக்கம் 45 ஆம் நூற்பாவின் கீழ்,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையிரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறுஅதிரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்"

எனத் திணைவிராய் வந்து (முன்னிலையோடு படர்க்கை யியைந்து) முன்னிலை வினைகோடலை அதிகாரப் புறனடை யாற் கொள்க" எனக் கூறியதையுமறிக.

(ஆ) தன்மையாகற்பாலது படர்க்கைப் பன்மையாய வழி அமையும்.

'நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்' என்புழி, 'பல்லே முள்ளும்' எனத் தன்மையாகற்பாலது பல்லோருள்ளும் எனப் படர்க்கையாயதைக் காண்க.

(இ) முன்னிலையாகற்பாலது படர்க்கையாயவழி அமையும்.

"முரசு முழங்கு தானை மூவருள்ளும்" என்புழி, 'மூவி ருள்ளும்' என முன்னிலையாகற்பாலது 'மூவருள்ளும்' எனப் படர்க்கை யாயதைக் காண்க.
இதுகாறுங் கூறியவற்றால்,

**இடவழாநிலை** — பொதுவாக 11-ஆம் நூற்பாவிற் கொள்ளும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், செலவு முதலியனவற்றிற்கும், எல்லாம் என்னும் விரவுப் பெயருக்கும் சிறப்பாக விரித்துக் கூறப்பட்டுள்ளது என்பதும், **இடவழுவமைதி** — விரித்துக் கூறியவற்றிற் சிலவற்றிற்கு நூலாசிரியராலும், அவரால் கூறப்படாத சிலவற்றிற்குச் சேனாவரையராலும் கூறப்பட்டுள்ளது என்பதும் அறியப்படும்.

# பழமுதிர்சோலை வரலாறு

(கி. பழநியப்பன்)

எழுமுதி ரைப்புனத்து இறைவி முன்புதன்
கிழமுதிர் இளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறெென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.

(கந்த புராணம்)

பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை மாநகருக்கு வடக்கே பன்னிரண்டு கல்தொலைவில் பசுமையான உயர்ந்து ஓங்கிய மலைத்தொடர் ஒன்றுளது. சோலைகள் நிறைந்த அம் மலைக் கூட்டத்தின் ஒரு பகுதி பழமுதிர்சோலை மலை யென் றும் மற்றொரு பகுதி திருமாலிருஞ் சோலைமலை யென்றும் பண்டு தொட்டு வழங்கி வருகின்றன. திருமாலிருஞ் சோலை மலையைத் திருமால் இருப்பிடமாகக் கொண்டும், பழமுதிர் சோலைமலையைத் திருமுருகன் இருப்பிடமாகக் கொண்டும் உலகம் உய்ய அருள் பாலித்து வருகின்றனர். இச்செய்தியை வேப்பத்தூர் சங்கப் புலவர்கள் இயற்றிய 'அழகர் கலம் பகம்' என்னும் அருமை நூலில் அழகாய் விளக்கியுள்ளனர்.

அஞ்சார வும்மணிநீ ராறுங் கிடைக்கரிய
மஞ்சீர மாறு வனகிரியே — பஞ்சவர்தம்
பங்கங் களைந்தான் பனிரண்டு கண்ணுருவர்
பங்கங் களைந்தான் பதி.

(அழகர் கலம்பம்)

''அழகிய மலைப்பக்கங்களிலும், அழகிய நீரையுடைய நதியிலும் படிந்து கிடக்கின்ற கருத்த மேகத்தின் குளிர்ச்சி நீங்காத சோலைமலையே, பஞ்ச பாண்டவர்களது அவமானத் தைப் போக்கினவனும், பன்னிரண்டு கண்களையுடைய ஒப் பற்ற ஆறுமுகக்கடவுள் பக்கத்தில் பொருந்தப் பெற்றவனு மாகிய அழகரது திருப்பதியாம்'' என்பதே அதன் பொருள்.

இவ்விரு சேலமலைகளில் திருமுருகனின் ஆறுவது படை வீடாகிய பழமுதிர் சோலையின் வரலாற்றை மட்டும் இங்கு நோக்குவோம்.

**இடபமலையின் தோற்றம்**

மன்னவனெப்படி மன்னுயிரப்படி என்ற முதுமொழிக் கிணங்க மதுரையை ஆண்ட அனந்த குணபாண்டியனிடம் தோன்றிய சிவபக்தி பாண்டிய நாட்டு மக்களிடம் பெருகியது. இதைக்கண்டு சமணர்கள் சினங்கொண்டு பாண்டியனைக் கொல்ல வகை தேடினர். வேள்விக் கூடம் ஒன்று அமைத்து எண்ணாயிரம் சமண குரவர்கள் வேள்வி நடத்தினர். அவ்வேள்விக் குண்டத்திலிருந்து தோன்றிய பயங்கரப் பாம்பு ஒன்றை மதுரையை அழிக்கவிடுத்தனர். அது கண்ட பாண்டியன் ஆலவாய் அண்ணலின் துணை கொண்டு அப் பாம்பினைக் கொன்றான். அதுவே இன்றும் நாகமலையாக மதுரைக்குமேற்புறம் விளங்குகின்றது. முன் இதுபோன்று சமணர்கள் அனுப்பிய கொடிய யானையும் சோமசுந்தரப் பெருமானால் மலையாக்கப்பட்டு மதுரைக்குக் கிழக்கே யானை மலையாக இன்றும் விளங்குகின்றது. இவ்வாறு இருமுறையும் தோல்வியுற்ற சமணர்கள் "இனியாது செய்வோம்?" என்று எண்ணி, "சிவநெறியைச் சார்ந்தோர் பசுவிற்கு ஊறு செய்யார்கள்; பழிக்கஞ்சுவர்; ஆகவே ஒரு மாயப் பசுவை விடுப்போம்" என்று அதற்கான வேள்வி யொன்றைச் செய்தனர். அவ்வேள்வியில் தோன்றிய மாயப் பசுவினை மதுரைத் திருநகரை அழிக்க விடுத்தனர். அப்பசு தன் கொம்புகளினால் மேகங்களைக் குத்தி மேலே கோத்துக் கொண்டு ஆதிசேடன் முடியும், மேருமலையும் புழுதிபட அடி பெயர்த்து வைத்தது.

மாடமலி மாளிகைமி லாடுகோடி மானக்
கோடுகெளி ளுேமுகில் குத்திமிசை கோத்துச்
சேடன்முடி யுங்கதிர்கோள் சென்னிவரை யுந்தூள்
ஆடவடி யிட்டேலவை யஞ்சிட வுயிர்த்தே. (திருவிளையாடல்)

இவ்வாறு கூற்றுவன் வரும் தன்மைபோல அப்பசு மதுரையை நோக்கி வெற்றிகொண்டு அழிக்க வந்துகொண்டிருந்தது அதனையறிந்த பாண்டியன் "பசுவைக்கொல்வது பாவமாகுமே! என் செய்வது?" என்று ஏங்கினான். சோமசுந்தரப்பெருமானின் திருக்கோயிலை அடைந்தான்; "நாதனே! இது முறையோ என் செய்வேன்?" என்று முயைிட்டான்.

நாதமுறை யோபோதுவின் மாறிநட மாடும்
பாதமுறை யோபலவு யிர்க்குமறி விக்கும்
போதமுறை யோபுனித பூரண புராண
வேதமுறை யோவென விளித்து முறையிட்டார்.

(திருவிளையாடல்)

அதுகேட்ட பெருமான் பாண்டியன் பால் திருவருள் நோக்கினைச் செலுத்திக் கருணை புரிந்தார் இடப நந்தியை அழைத்துச் "சமணர்கள் விடுத்த மாயப் பசுவை வென்று வருக!" என்று கூறி அனுப்பினார்.

இடபநந்தி கூற்றுவனும் அஞ்சும் வண்ணம் சினந்து எழுந்தது. 'நெற்றியில் பட்டம் விளங்க கொம்பில் செம்மணிப் பூண் பிறைச் சந்திரனைக் கேது என்னும் பாம்பு சுற்றிக் கிடந்தாற் போலத் திகழ்ந்தது. முதுகில் பொற்கவசம் கதிரவனைப்போல் விளங்கியது. கொம்பிலே கட்டப் பெற்ற கவரிக் குஞ்சம் பிறைமதிக்கதிர் போல் தொங்கியது நெற்றியில் முத்தாலாகிய முகவட்டுப் பொலிந்து விளங்கியது; பின்னலாகிய மாட்டுச் சதங்கைமாலை கல்லென்று வாய்விட்டு ஆர்த்தது; பாம்பு நாவினை அசைத்தல் போலக் கழுத்தில் வீரமணி நா அசைந்து ஒலித்தது. நான்கு கால்களிலும் தண்டையும் சிறு சதங்கையும் அரசிலை வடிவாகச் செய்த மாலையும் சிலம்பும் ஒன்று சேர்ந்து ஒலித்தன. (இன்றும் திருநாட்காலங்களில் "அழகர் மாடு" என்று கொண்டு வரப்படும்

காளைகள் இத்தனை அலங்காரங்களுடன் விளங்குவதைக் காணலாம்.)

நெற்றித் தனியோடை நிமிர்ந்து மறிந்த கோட்டிற்
பற்றிச் சுடர்சேம் பணிப்பூண் பிறை பைய நாகஞ்
சுற்றிக் கிடந்தா லெனத்தோன்ற வெள்ளாழி யீன்ற
கற்றைக் கதிர்போற் பருமம்புறங் கௌவி மின்ன.
கோட்டுப் பிறைகால் குளிர்வெண்கதிர்க் கற்றை போலச்
சூட்டுக் கவரித் தொடைத் தொங்கலு நெற்றி முன்னுப்
பூட்டுத் தரள முகவட்டம் பொலியப் பின்னல்
மாட்டுச் சதங்கைத் தொடைகல்லென வாய்விட்டார்ப்ப
பணிநா வசைக்கும் படியென்னக் கழுத்தில் வீர
மணிநா வசைப்ப நகைமுத்தின் வகுத்த தண்டை
பிணிநாண் சிறுகிங் கிணிப்பல மாலைத் தொங்கல்
அணிநா ணலம்பச் சிலம்பார்ப்ப வடிக ளுன்கும்.

(திருவிளையாடல்)

இவ்வாறு தோன்றிய வெள்ளிய இடபமானது வெள்ளிமலை யொன்று கால்பெற்று நடந்தாற்போல விரைந்து சென்று கண்களினின்றும் தீயினைச் சிந்த மாயப்பசுவைத் துரத்தி முட்டி நாலாபக்கமும் தூக்கி எறிந்து போர் விளையாடலைப் புரிந்தது. சமணர்கள் எண்ணியபடிப் பசுவைக் கொல்லாது இடபநந்தி தனது பேரழகைக் காட்டிப் பசுவை வென்றது. இடபத்தின் அழகைக் கண்டு மாயப்பசு இச்சை கொண்டு காமம் மிகுந்து உயிரோடு வீரியத்தை விட்டுக் கீழே விழுந்தது. அங்கு அதன் உடல் மலைவடிவமாயிற்று. அதைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். மன்னனின் திண்ணிய தோள்கள் பூரித்தன. சமணர்கள் நாணி ஓடினர். உலகோர் அறியுஞ் சான்றாக இடபநந்தி தனது தூல உடலை இடபமலையாக விளங்க நிறுத்தி விட்டுச் சூக்கும சரீரத்தோடு ஆலவாய் அண்ணல் கோயில் அடைந்தது. அவ்விடபமலையே இன்று 'விருஷபாத்திரி' என்று அழகர்

கோயில் மான்மியத்திலும் திருமாலிருஞ்சோலைமலை, பழமுதிர்சோலைமலை, சோலைமலை, அழகர்மலை என்று பலவாறு உலக வழக்கினும் வழங்கப்படுகிறது.

**இடபமலையின் சிறப்பு:** இடபமலையின் அமைப்பும் சிறப்பும் வாமன புராணத்தில் கூறப்பட்டுள்ளமை சற்று நோக்கத்தகும் "இப்பெருஞ்சயிலம் **இடபத்தைப் போன்றும்**, பசுவைப்போன்றும் இருப்பதால் அமரர், கருடர், காந்தருவர், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்தியாதரர், முனிவர், மனிதருட் சிறந்தோர் முதலிய யாவரும் '**விருஷபாத்திரி**' என விருப்போடு திருப்பெயரிட்டுக் கொண்டாடினார்கள். "மெச்சத்தக்க அழகு வாய்ந்த இவ்வருவத்தின் மேல் நீங்காதிருக்கும் மதகரிகளும், பாங்காயதற்குச் சமீபத்திலுலாவும் மேகங்களும் ஒன்றுக்கொன்று வேற்றுமை தோன்றாதிருத்தலால், தந்தியினங்கள் அம்மஞ்சுத்திரள்களைத் தம்மினமெனச் சிந்தித்து அவற்றோடு சேர்வதற்கு ஓடியோடி இனத்தைக் காணாது மருட்சியடைந்து நிற்கும். இலட்சக்கணக்காயுள்ள வரையாடுகள் தம்மிசையாகவே அச்சமில்லாமற் குதிக்கும் போது அவற்றின் பாதங்களால் எற்றுண்டு குதிக்கும் பச்சை ரத்தினங்களின் மிச்சமாகிய வொளியினால் அம்மறியினங்கள் பச்சைக் குதிரைகள் போலத் தோன்றும். அங்கம் பெருத்த மலைப்பாம்பின் சருமங்கள் புங்கர் வாழ் நகரின் துங்கக் கொடிகள் போல அங்கங்கே தொங்கிக் கொண்டிருக்கும். தவறிய கவரிமான் மயிர்த் தொகுதிகள் அருவிநீர் பாய்வது போல் அழகுபெற வரிசையாகத் தோன்றும். முற்றிய மூங்கிலுதிர்த்த முத்துக்கள் சிற்றிடைச் சிங்கத்தாற் கொலையுண்ட அத்தியினுடைய இரத்தப் பெருக்கில் தோய்ந்து கூட்டம் கூட்டமாய்க் கிடப்பதானது பத்தினிப் பெண்களின் உத்தம மார்பிற் சித்திரைக் குங்குமத்திற்றோய்ந்த முத்து மாலைகளைப்போன்று விளங்கியது. செங்கழுநீர் அலர் பொங்கி மேற்றிகழ எங்கும் பரவும் துங்கப்புனல் சேர் அருவிப்பெருக்கானது சங்கரன் முடிமேல் மங்காதிருக்கும் கங்கை நீர் வந்தது போலிருக்கும்."

(தொடரும்)

122 ஆம் பக்கத் தொடர்ச்சி

# இளம்பூரணர் எழுத்துரை.

[ஆ. சிவலிங்கனூர், மயிலம்.]

## இளம்பூரணர்.

**வரலாறு**

இளம்பூரணன் என்ற சொல் இளமை நிறைந்தவன் என்னும் பொருளுடையது. என்றும் இளையனாகிய முருகனுக்கு இளம்பூரணன் என்றும் பெயர் உண்டு. இப்பெயர் அக்காலத்தில் ஒரு பொதுப் பெயராக மக்களால் வழங்கப் பட்டிருக்கலாம். நம் அடிகளுக்கும் இப்பெயர் பிறந்த காலத்துவைக்கப்பட்ட பெயராகலாம். நன்கு மதிக்கற் பாடு பெற்ற காலத்தில் இளம்பூரணர் எனப்பட்டார். 'இளமையிலேயே கல்வியறிவொழுக்கங்கள் நிறைந்திருந்த காரணத்தால் இளம்பூரணர் எனப்பட்டார்' என்றும் கூறுவர். இவரது வரலாறு பற்றி ஒன்றும் அறிதற்கில்லை.

உயர்திருவாளர், T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள், செந்தமிழ்த் தொகுதி 42 பகுதி 10-12-ல் இளம்பூரணர் வரலாறு பற்றிய கட்டுரையொன்று எழுதியுள்ளார்கள். இளம்பூரணர் கீழ்க்கடலைச் சார்ந்த செல்லூர் என்ற ஊரினர் என்றும், அந்தணரான இளம்போதி என்பார் மகனார் என்றும், துறவறத்தார் என்றும், மணக்குடிபுரியான் என்ற தொல்குடியினர் என்றும், மணக்குடிபுரியான் என்பதே மணக்குடியுடையான்—மணக்குடையான்—மணக்குடையார் - மணக்குடவர் என மருவியது என்றும், அதனால் மணக்குடவர் என்பார் இளம்பூரணரே என்றும், திருக்குறளுக்கேயன்றிக் கொங்வேள்மாக்கதைக்கும் உரை

வகுத்தவர் இவர் என்றும், பிறவாறும் எழுதியுள்ளார்கள். அவர்கள் அவ்வாறு எழுதுவதற்குத் தமக்குக் கிடைத்த 'தொல்காப்பிய இளம்பூரணர் உரைப்பாயிரம்' என்று சொல்லப்பட்ட "தண்கடல் அசைவளி" எனத் தொடங்கும் ஒரு பாடலே சான்று எனக் கூறினர். அவர்கள் எழுதிய செந்தமிழ்த் தொகுதி 42, பகுதி 10-12ல் அவர்கள் கட்டுரைக்குப் பிற்குறிப்பாகச் செந்தமிழ் உதவிப் பத்திராசிரியராயிருந்த உயர்திரு T. K. இராமாநுஜ அய்யங்கார் அவர்கள் மறுப்புக் கட்டுரை எழுதியுள்ளார்கள். திரு. ஐயங்கார் அவர்கள் "தண்கடல் அசைவளி" என்ற அவ்வுரைப் பாயிரச் செய்யுளையே ஐயப்பட்டார்கள். இப்பாட்டன்றி வேறு சான்றில்லையாதலின் பண்டாரத்தார் அவர்கள் கருத்து ஏற்பதற்கில்லை என்றும், மணக்குடவரும் இளம்பூரணரும் ஒருவர் அல்லர் என்றும் மறுத்துள்ளார்கள். திரு. ஐயங்கார் அவர்கள் மறுப்புக்கு மறுப்பு இன்னும் வெளிவரவில்லையாதலின் முன்னவர் கருத்தை ஏற்பதற்கில்லை. எனவே அது பற்றி ஈண்டு ஆராயாது விடுத்து மேற்செல்வேம்.

**அடிகள்**

அடிகள் என அழைக்கப்படுதலின் இவர் துறவியார் எனக் கூறுகின்றனர். மயிலைநாதர் நன்னூல் உரையில்,

> "ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி **யிளம்பூரணர்** எனும் ஏதமில் **மாதவர்** ஓதிய வுரையென்றுணர்க. (நன்னூல் 360)

என்றுரைத்ததைச் சான்று காட்டுவர். இதில் 'மாதவர்' என்றது துறவி என்பதற்குத் துணைபுரியும் என்பது அவர் கொள்கை. இம்மயிலைநாதர் கூற்றிலும் பாடபேதம் உண்டு. அது,

> ''இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங் கூர் கேள்வி **யிளம்பூரணர்** உரையெனத் தேறிய கவி ஞர் கூறுபட வறிமின்''

என்பதாம். இத்தொடரில் இளம்பூரணர் என்றே யிருப்பது காண்க. அன்றியும்,

> 'இனி **இளம்பூரணவாசிரியர்** வேங்கைப்பூ என்ப தனை முன்னிடத்துக்கும் அடைகடல் என்பதனைப் பின் னிடத்துக்கும் காட்டுவர்'' (நன். 369)

என வந்த அவர் கூற்றிலும் 'இளம்பூரணவடிகள்' என்ப தின்றி, 'இளம்பூரணவாசிரியர்' என்றே யிருத்தலையும் காண்க.

இனி, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார வுரையில், ''உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள்''[1] எனக் கூறிய தையும், பிறிதோரிடத்தில் ''அடிகள்' என்றது துறத்த லான்''[2] எனக் கூறியதையும் சான்றுகாட்டி இளம்பூரண ரைத் துறவி என்பர். 'அடிகள்' என்ற சொல் துறவிகட்கே வழங்கப்பட்டது என்பது பொருந்தாது, மதிப்புக்குரிய ஒரு வரைக் கூறும் சொல்லாகவே அது பயன்பட்டது என்ன லாம். அச்சொல் துறவியர்க்கும் இல்லறத்தார்க்கும் பொது வாகவே வழங்கப்பட்டது என்னலாம் ''சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்''[3] எனவும், "அமுதம் உண்க அடிகள்''[4] எனவும் கோவலன் அச்சொல்லால் குறிக்கப்படுதல்காண்க. அடியார்க்கு நல்லார் தாம் உரை யெழுதிய சிலப்பதிகாரத்

1. சிலப்பதிகாரம். புகார். வேனில் 1-2 உரை.
2. சிலப்: பதிகம், உரைத் தொடக்கம்.
3. ஷை: மதுரை: கொலைக்களக் காதை. 18.
4. ஷை: ஷை ஷை 43.

திலேயே உள்ள ஆட்சியை மறந்தவர் என்பதற்கில்லை. அவர் 'அடிகள் என்றது துறத்தலான்' என எழுதியது, 'இளங்கோவை மதிப்பது அவர் துறவுகண்டு' என்பதைத் தெரிவிக்கவே என்னலாம். எனவே அடிகள் என வருவது கொண்டு இளம்பூரணரைத் துறவி என்றல் பொருந்தாது. பிற காரணங்களும் சான்றுகளும் தேவை. இம்முடிபால் அடிகள் துறவியல்லர் என முடிவுகட்டலும் தவறே. இவற்ருல் இளம்பூரணர் எவ்வறத்தினர் எனத் துணியவியலாது என்பது பெறப்படும்.

**சமயம்**

இளம்பூரணன் முருகன் ஆதலின் அப்பெயர் தாங்கிய அவர் சைவர் எனக்கொள்பவரும் உளர். அது பொருத்தமில்லை. சைன சமயத்தவர் எனக்கொள்வதற்கேனும் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் சான்றுண்டு என்னலாம். தொல்காப்பிய முதல் நூற்பாவில் னகர ஒற்றை இறுதிக்கண் கூறியதற்கு அமைதி கூறிய இளம்பூரணர்,

> "னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற்
> சிறப்பான் பின்வைக்கப்பட்டது"

என்ருர். சைவம் போன்ற சமயங்கள் ஆண் பெண் இருவருமே வீடுபேறடையலாம் என விதி கூறச் சைன சமயம் ஆண் மட்டுமே வீடுபேறடையலாம் என விதித்தது. ஓர் உயிர் பெண் உடம்பெடுத்தபோது தான் வீடு பேறடைதற்குரிய செயல்களை மேற்கொண்டொழுகினும் அப்பெண்ணுடலை நீத்து அடுத்த பிறவியில் ஆணுடலையெடுத்தே வீடுபேறடையலாம் என்பது அச்சமயக் கோட்பாடு. அதற்கேற்பவே இளம்பூரணர் "வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பு" என்ருர். இவ்வாறு கொள்வதாயின் இளம்பூரணர் சைன சமயத்தவராவார். இக்கருத்தும்

பொருந்துவதாக இல்லை.

'வீடுபேற்றிற்குரிய ஆண்பால்' என்ற துணையானே வீடுபேற்றுக்குப் பெண்பால் உரியதன்று என்பதில்லை. னகர எழுத்தை இறுதிக்கண் அமைத்தற்கு அமைதி கூற வந்தவர், "னகரம் ஆண்பாலை யுணர்த்தும்; அவ்வாண்பால் வீடுபேறடைதற்குரியது; எனவே னகரத்துக்கு வீடுபேறையும் ஆண்பாலை உணர்த்துகின்ற ஒரு சிறப்பு இருக்கின்றது. அதனால் அது பின்வைக்கப்பட்டது" என்று விளக்கம் கொள்ளும்படி அவ்வாறு எழுதினரேயன்றிப் பெண்பால் வீடுபேறடையாது என்ற கொள்கையில் எழுதினர் இல்லை. தம் சமயக் கொள்கையையே எழுதினர் என்றே கொள்வதாயின் பிறவிடங்களிலும் வாய்ப்பு நேரும்போதெல்லாம் தம் சமயச் சொற்களையும் கருத்துக்களையும் குறிப்பிட்டே சென்றிருப்பர். அவ்வாறு வாய்ப்புக்கள் வந்தும் குறியாமையின் அவர்க்கு அது கருத்தன்றென்க. அதற்கிரண்டிடம் காண்பாம்.

> "உயிரீ றுகிய வுயர்திணைப் பெயரும்
> புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரும்
> எல்லா வழியும் இயல்பென மொழிப" (154)

என்னும் நூற்பாவில் எடுத்துக்காட்டு காட்ட வந்த நம் உரையாசிரியர், "குமரகோட்டம், குமரக்கோட்டம்; பிரமகோட்டம், பிரமக்கோட்டம்" என்பனவாகக் காட்டாமல் அருககோட்டம் அருகக்கோட்டம் என்று காட்டியிருக்க வேண்டும். அவ்வாறு காட்டாமை காண்க.

சைனசமயத்தார் பூதம் நான்கென்ப. வான் ஒரு பூதமாக உடன் படார். தொல்காப்பியர்,

> "நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் உலகம்" (தொல்-பொருள், 635)

என்றார். இவ்விடத்து விசும்பு என்பது ஒரு பொருளன்று என்று தம்சமயக்கொள்கையைச் சுட்டிச்சென்றிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் விசும்பும் ஒருபூதம் என உடன்பட்டவராய்,

> "உலகம் என்றது உலகினையும் உலகினுட்பொருளையும். உலகமாவது முத்தும் மணியும் கலந்தாற்போல நிலம் நீர் தீ வளி ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுட் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றானாற்போல வேற்றுமைப்படாது நிற்கும். அவ்விரண்டினையும் உலகம் உடைத்தாதலின் கலந்த மயக்கம் என்றார்"

என விளக்கம் எழுதிச் சென்றார். இவற்றால் இளம்பூரணர் சைனசமயத்தவர் அல்லர் என்னலாம். எனவே இவர் சமயம் அறியப்படாச் சான்றோராவர்என்னலாம்.

**சிறப்பு:**

தொல்காப்பிய உரைகளுள் இளம்பூரணர் உரையே காலத்தால் முந்தியதாம். நச்சினார்க்கினியர், சேனாவரையர் போன்றார்க்குப் பெருந்துணைபுரிந்தது இவர் உரையே. இவர் உரையில்லை யென்றால் "மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே" (360) என்பது போன்ற நூற்பாக்களுக்கு உரை காணுதல் அரிதாம். மேல்நூற்பாவில் மகன்வினை என்பதற்கு "மகற்குத்தாயாற் பயன்படும் நிலைமையன்றி அவளொடு பகைத்த நிலைமையை" என உரையெழுதி, 'மகன்தாய்க் கலாம்' என எடுத்துக்காட்டும் காட்டவில்லை யென்றால் அந் நூற்பாவின் உரை விளங்குதல் அரிதேயாம்.

தொல்காப்பியர் ஒரு பொது விதி கூறினர் என்றால் அதனை முதன்மையாகவைத்துப் பின்னர் மற்றைய சிறப்பு

விதிகளைக் கைக்கொள்வர்இவர் அதாவது சிறப்பு விதி கூறிய விடங்களிலும் பொது விதியைக் கொண்டுவந்து பொருத்திப் பின் சிறப்பு விதியைப் பொருத்துதல் இவர் கொள்கை. அவ்வாறு பொருத்துமிடத்துப் பொது விதி பயன்படுமாயின் பொருத்தியும், பயன்படாதாயின் பொருத்திப் பின் விலக்கியும் சிறப்பு விதியைப் பொருத்துவர்.

"அத்தவண் வரினும் வரைநிலை யின்றே" (220)

என்ற நூற்பாவிலும்,

"மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை" (219)

என்ற நூற்பாவிலும் அவற்றைக்காண்க, பொதுவிதிபயன் படாதாயின் பொருத்திப் பின் விலக்கவேண்டும் என்பதை உட்கொண்டே ஆங்காங்கு, 'உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி யியைபு வல்லெழுத்து வீழ்க்க" என்றெழுதுவர்.

ஆசிரியர் கூருதவற்றை நூற்பாவின் மிகைச்சொற்களில் அடக்கிக் காட்டுதல் யாவரும் கைக்கொள்ளும் வழக்கம். இவர் அவற்றை நூற்பாவிலேயே இடமிருக்குமாளுல் பொருத்தி உரை கூறிச்செல்வர். முடியாவிடின் மிகைச் சொற்களில் அடக்குவர். "நாட்பெயர்க்கிளவி" (332) என்ற நூற்பாவில் 'அத்தும்' என்பதன் உம்மையை 'ஆன்மிசையும்' எனமாற்றிப் பொருள் உரைத்து 'மகத்து ஞான்று கொண்டான்' என்ற உதாரணமும் காட்டிச் சென்றதைக் காண்க.

பெரும்பான்மை சிறுபான்மை வழக்குகளைக் கொண்டு உதார்ணங்களைப் பொருத்திக்காட்டும் அழகினை "மெல்லெழுத்தியையின் இறுதியோ டுறழும்" (343) என்ற நூற்பாவிற் காணலாம். தேன்ஞெரி என்பது தேஞெரி எனவும்

வழங்கும். இறுதி எழுத்துக் கெட்டும் கெடாது இயல்பாயும் வருவதை உறழ்ச்சி என்பர் இலக்கண நூலார். அதுபோலவே வருமொழி முதல் எழுத்து மிகுதலும் மிகாமையுமாகிய இரண்டு நிலையையும் உறழ்ச்சி என்பர். தேன் + ஞெரி என்பன னகர வீறுகெட்டுத் தேஞெரி எனவும் வருமொழி முதல் ஞகரம் மிகுந்து தேஞ்ஞெரி எனவும் வரும். எனவே தேன் ஞெரி, தேஞெரி என்பன நிலைமொழி யீறுபற்றிய உறழ்ச்சி எனவும், தேஞெரி தேஞ்ஞெரி என்பன வருமொழி பற்றிய உறழ்ச்சி எனவும் கொள்ளலாம். மேல் நூற்பாவில் (343) இவ்விரண்டுறழ்ச்சியுள் நிலைமொழியீறுபற்றிய உறழ்ச்சி யையே கொண்டார் இளம்பூரணர். ஏன்எனின் தேஞ்ஞெரி என்பது சிறுபான்மை வழக்காதலின் என்க.

பலபொருள் ஒரு சொல்லாயின் அது பெறும் புணர்ச்சி விதிகளைப் பொருளுக்குத் தக்கவாறு பொருத்திக் காட்டுவர். புளி என்பது புளி மரத்தையும் புளிச்சுவையையும் உணர்த்தும். புளியங்காய் என்பது புளிமரத்துக்காய் எனப்பொருள் படுமாறல் "புளிமரக் கிளவிக் கம்மே சாரியை" (245) என்ற விதிக்குட்பட்டதாம். புளிச்சுவையுடைய காய் எனப் பொருள் படுமாறல் அவ்விதிக்குட்படாதாதலின் "வல்லெழுத்து மிகினும்" (247) என்ற நூற்பாவின் கீழ் 'வழக்கத்தான' என்ற ஒரு நூற்பாவின் மிகையினுல் கொள்ள வேண்டும் என எழுதினர்.

இப்படியாக இவர் உரையின் சிறப்புப்பற்றிப் பல எழுதலாம். அவையெல்லாம் நூலில் நுழைந்து உணர்தல் வேண்டும். ஆதலின் இத்துடன் நிறுத்துவேம்.

(முற்றும்)

# தாகூர் நெறியது காணீரோ?

''ஆதிரை இளஞ் சித்தன்''

---

1. அலகிற் பெருமையைக் குழவித் தலையினில்
அடையத் தருமொரு முறைநீக்கிக்
கலையைத் தெரிந்திடும் வழியே இறையவன்
கனியைத் தெளிந்திடல் அறிவென்றே
உலகிற் குரைசொலி விசுவப் பெயருடன்
உயர்வைத் தரும்வகை அறிவிற்கோர்
நிலையத் தினையவன் நிறுவிக் கவிதையில்
நிறையும் பொருளென நிலைநின்றோன்!

2. அடிமைத் தளையினை விடுவித் திடவழி
அகிலத் துயிர்களை உணர்வூட்டல்
மடமைத் துயரினை அகலச் செயவெனில்
வளமார் இயற்கையை நனிபோற்றல்
உடையோர் சிலர்பலர் வறியோர் எனும்நிலை
ஒழியத் தொழில்பல நிலைநாட்டல்
கடனே இதுவெனக் கருதிக் கவிசொலி
உலகுக் கொருகவி எனநின்றோன்!

3. கோளம் அவைபல குடிகொள் உயிர்களின்
கோலம் பலவெனல் உணர்வீரேல்
மாளும் பகையினி ஒழிவீர்! அவரவர்
வாழ்வே பெரிதென மதியீரே!
தாளின் வழியொரு குலமே, அயன்தலை
தன்னின் வழியொரு குலமென்றே
நாளுங் கதைசொலி நலிவீர்! கவிமணி
தாகூர் நயமொழி தெளியீரோ?

4. கவியஞ் சலியொடு கருதுஞ் சுவையெழ
கருணைக் கடவுளை வாழ்த்திடுவான்;
புவியோர் அனைவரும் ஒருதாய் வழியென
பொருந்தப் பெருவழி காட்டிடுவான்;
உவகை மிகவெழ அரங்கின் மிசையவன்
உள்ளங் கவர்வகை கூத்திடுவான்;
நவிலுங் கதைபல தருவான்; உயிர்பொதி
நல்லோ வியம்பல தீட்டிடுவான்!

5. வானைத் தழுவிய நினைவால் உலகினில்
வாழும் மனிதரை நினையாமல்
மோனைத் தொடர்களில் வீணுக் கெழுதிட
முன்வந் திடுபவர் போலாது
ஊனைப் படிமிசை வியர்வை வடிவினில்
ஊற்றிப் பணிசெயும் எளியோர்க்குத்
தேனுக் கிணையெனச் செப்புங் கவிபல
செய்தோன் கவிமணி தாகூரே!

6. ஆயுங் கலைகளை ஆரத் தெளிகநும்
அன்னைத் திருமொழி தனிலென்றே
நேயத் துடனுரை கூறிப் பணிபுரி
தாகூர் நெறியினை அறிந்தேயும்
தாயைப் புறமென விடுவார், பிறர்தமை
சார்வார் மிகுபொருள் தருவார்போல்
வாய்மைத் தமிழது நலியப் பிறமொழி
வாழ்வைத் தருபவர் உணர்வாரோ?

---

# தமிழ் இலக்கிய வாயில்

## *(An Introduction to Tamil Literature)*

### I. தமிழ்மொழி

[ அ. கி பரந்தாமனுர், M. A., ]

**தமிழ் மக்கள்தொகை:** எத்திசையும் புகழ்மணக்க இருந்த தமிழ்மொழி, தமிழகத்தின் தாய்மொழி. 1961-ஆம் குடிமதிப்பின்படித் தமிழக மக்கள்தொகை 3,36,50,917 ஆகும். தமிழகத்தில் வாழும் மற்ற மொழியினர் நீங்கலாகத் தமிழ் பேசும் மக்கள் 3 கோடிக்குக் குறையாமல் இருப்பார்கள். தமிழகம் தவிரப் பம்பாய்ப்பகுதிகளிலும், பூனுவிலும், தில்லியிலும், வங்கப்பதிகளிலும் தமிழர்கள் குடியேறியோ தங்கியோ வாழ்கிருர்கள். இலங்கையில் மட்டும் 25 லட்சம் தமிழர்கள் வாழ்கிருர்கள். மொரிசியசு தீவில் 60,000 தமிழர்கள் இருக்கிருர்களாம். இன்னும் நேட்டாலிலும் அந்தமான் தீவிலும் பிஜித்தீவிலும் மலேயாவிலும் பர்மாவிலும் உலகத்தின் பிறபகுதிகளிலும் தமிழர்கள் இருக்கிருர்கள். இவர்கள் அனைவரையும் சேர்த்துக் கணக்கிட்டுத் தமிழ் மக்கள் தொகை $4\frac{1}{4}$ கோடி என்பர். இப்பெருந்தொகையினராக உள்ள மக்களுடைய தாய்மொழியே தமிழ்மொழியாகும். இவ்வனைவரையும் ஒன்றுபடுத்தும் மொழி தமிழ்மொழியே

**தொன்மொழி:** இந்தியாவில் 179 இலக்கிய மொழிகளும் 544 கிளைமொழிகளும் இருப்பதாக இந்தியநாட்டின் இன்றைய மொழிநூலறிஞர்களுள் ஒருவரான சுனிதிகுமார் சட்டர்ஜி கூறுகிருர். இங்குக் குறிப்பிடப்பட்ட 179 இலக்கிய மொழிகளுள் தொன்மையான மொழிகள் சிலவே. அச்சிலவற்றுள் தொன்மொழியாக இருப்பவை மிகச்சிலவே அச்

சில தொன்மொழிகளுள் அமிழ்தினும் இனிய தமிழ்மொழி ஒன்று என்பதில் ஐயமில்லை.

**தென்மொழிகளுள் தொன்மையானது:** தென்னகத்தில் வழங்கும் திருந்திய திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகியவற்றுள் அருந்தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. M. சீனிவாச ஐயங்கார் M A. தம்முடைய தமிழாராய்ச்சி (Studies in Tamil) என்னும் நூலில், ''தென்னிந்திய மொழிகளுள் பழமையானதும் பண்பட்டதும் தமிழ் மொழியே'' என்று குறிப்பிட்டுள்ளார். மொழி நூலறிஞர் டாக்டர் கால்டுவெல் "தமிழ் பண்டையது; நலம் சிறந்தது; உயர்நிலையில் உள்ளது......விரும்பினால் வடமொழி உதவியின்றி இயங்க வல்லது" என்றார். கிரியர்சன் என்ற மற்றொரு மொழிநூல் அறிஞர், ''திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே மிகத் தொன்மை வாய்ந்ததும் பெருவளம் பொருந்தியதுமாகும்'' என்றார். இவர்களுடைய கூற்றுக்களால், பல மொழிகளை நலமுற ஆராய்ந்து சொல்லியவற்றால் தமிழ் மொழி தொன்மையான மொழியென்பதை நன்கறியலாம்.

மேலும் தமிழின் மெல்லோசையும் அதன் வளமுள்ள பண்டை இலக்கண இலக்கியங்களும் தமிழ் மொழியின் தொன்மையை நன்கு விளக்கும் சான்றுகளாகும். எவ்வளவு குறைத்துக் கூறினாலும் தமிழ் மொழி 3,400 ஆண்டுக்குக் குறையாத தொன்மையுடையது என்பதில் கற்றறிந்த யாரும் மாறுபட்டுக் கூறுவது முடியாது.

**தமிழைப் பற்றித் தமிழ்க் கவிஞர்கள்:** தமிழ்க் கவிஞர் பலர் தமிழின் இனிமையைப் பாராட்டியிருப்பதைப் பல நூல்களில் காணலாம். மாணிக்கவாசகர் 'ஒண்தீந்தமிழ்' என்றும், 'தண்ணார் தமிழ்'' என்றும் பாடியுள்ளார். "என்

றுமுள தென்றமிழ்'' என்று கம்பர் தமிழைப் பாராட்டியிருப்பதைக் காண்கிறோம். தஞ்சைவாணன் கோவை ஆசிரியர், ''தேருந்தொறும் இனிதாம் தமிழ்'' என்றார். திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர், ''மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும்படுமோ?'' என்றார். மற்றொரு கவிஞர், ''தன்னேரிலாத் தமிழ்'' என்றார் வடமொழி ஆங்கிலம் முதலிய சில மொழிகளை அறிந்த தேசியக் கவிஞர் பாரதியாரோ, ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று தமக்குத் தெரிந்த மொழிகளோடு ஒப்பிட்டுநோக்கித் தமிழே இனிமையான மொழி என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிட்டார், வேறு கவிஞர்கள் கன்னித் தமிழ், தென்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், மூவாத் தமிழ் என்றெல்லாம் தமிழைப் பற்றிப் பாடியிருத்தலைக் காண்கிறோம். ஆதலால் தமிழ் இனிமையான மொழி என்று அறியலாகும்.

**ஐரோப்பியர் கூறும் சிறப்புகள்:** இனித் தமிழைக் கற்ற ஐரோப்பிய அறிஞர்கள் தமிழ் மொழியைக் குறித்துக் கூறுவதைக் காண்போம். வின்சுலோ என்ற அறிஞர், ''செய்யுள் தன்மையில் கிரேக்க மொழியினையும் இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியினையும் வெல்ல வல்லது தமிழ் மொழி'' என்றார். மேலும் இவரே, ''அதன் (தமிழ்) பெயரே இனிமை என்று பொருள்படுவதற்கு ஏற்ப அதனிடத்தில் கேட்டாரைத் தன்வயமாக்கும் இனிமை பொருந்தியிருப்பதற்கு ஐயம்இல்லை'' என்றும் குறிப்பிட்டுள்ளார். டெய்லர் என்பார், ''அது (தமிழ்) நிறைந்து தெளிந்து ஒழுங்காயுள்ள மொழிகளுள் மிகவும் சிறந்த தொன்றாகும்'' என்று மொழிந்துள்ளார். டாக்டர் G. U. போப்பாதிரியார், தமிழ்மொழி எம்மொழிக்கும்

இழிந்த மொழி அன்று'' என்று கூறியுள்ளதைக் காண்கிறோம். முற்குறித்த கிரியர்சன். தமிழ் மொழியை மிகவும் சீர்திருந்திய உயர்தனிச் செம்மொழி என்றும், செல்வவளம் மிகுந்தது என்றும், அளவிடவொண்ணுப் பண்டைக் காலம் முதல் பயின்று வருவது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். சிலேட்டர்,'' திராவிடமொழிகள் எல்லாவற்றுள்ளும் மக்கள் பேசுமொழிக்குரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ் மொழி; தர்க்க அமைப்புடையதும் தமிழ்மொழியே'' என்றார். தமிழகத்தில் பிறந்து வளர்ந்து தமிழை நன்கு கற்றுத் தமிழரைப் போல் எழுதவும் பேசவும் வல்லவராக விளங்கிய அமெரிக்கர் ஒருவர் தம்மிடம் தமிழ்மொழி எண்ணுவதற்கும் பேசுவதற்கும் எந்த ஐரோப்பிய மொழியையும் விடச் சிறந்தது என்று கூறியதாக விட்னி என்ற ஐரோப்பிய அறிஞர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜான் மர்டாக் என்பார், ''சிரிய மொழியாயும் அழகிய இலக்கியங்கள் பொருந்தப் பெற்றதாயும் விளங்குவது தமிழ் மொழியே''என்றார். சார்லசுகவர்என்ற அறிஞர் ''தெலுங்கு மொழியின் மெருகு நிலையும் அருந்தமிழ்ப் பாநலமும் ஐரோப்பாவில் மிகுதியாகத் தெரியப்படுத்துதல் வேண்டும்'' என்று குறிப்பிட்டார். வடமொழி மறைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அறிஞர் மாக்சுமுல்லர், ''தமிழ் மிகப் பண்பட்டமொழி; தனக்கே உரியதாக வளர்ந்த சிறந்தஇலக்கியச் செல்வமுள்ளமொழி'' என்றார். இத்துணை ஐரோப்பிய அறிஞர்கள் தமிழின் தொன்மையினையும் மென்மையினையும் இனிமையினையும் தனித் தன்மையினையும் எடுத்துக் கூறியுள்ளார்கள் என்றால், அவர்கள் சொல்லிய அத்தனையும் பொய்யாகுமோ? இல்லை. அவ்வளவும் உண்மை; வெறும் புகழ்ச்சியன்று.

**முடிவுரை**

தமிழ்மொழி, சுருங்கக் கூறினால், முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப்பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்க் கன்னித்தமிழாய் அறிவியலுக்கு ஏற்ற மொழியாய் இலங்குவது என்று கூறலாம். கனியினும் இனிக்கும் பண்பும் கவினுறு சொல்லின் வளமும் தொனிப்பொருள் அளிக்கும் இன்பமும் பிறவும் தமிழ்மொழிச் சிறப்பைக் காட்டித் தரணியில் அம்மொழியின் பெருமையை என்றும் கூறிக்கொண்டிருக்கும். இத்தகைய தமிழ்மொழியின் இலக்கியத்தைக் கற்கக் கற்க இன்பம் இல்லாமல் இருக்குமா? (தொடரும்)

# நச்சினார்க்கினியரும் மெய்ம்மயக்கமும்,

[மா. இளையபெருமாள் எம் ஏ; எம்.லிட்]

தமிழ் மொழியில் எந்த எந்த மெய்யொலிகள் எந்த எந்த மெய்களை அடுத்து இணைந்து சொற்களில் வரும் என்பதனைத் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் குறிப்பிடுகிறார். நூன்மரபில், "டறலள என்னும் புள்ளி" என்று தொடங்கும் சூத்திர முதல் "மெய்ந்நிலை சுட்டின்" என்று தொடங்கும் சூத்திரம் வரையுள்ள எட்டு நூற்பாக்களில் ஈரொற்று மயக்கத்தையும், "யரழ என்னும் மூன்றும்" என்னும் மொழி மரபுச் சூத்திரத்தில் மூவொற்று மயக்கத்தையும் குறிப்பிடுகிறார். மேற்குறிப்பிட்ட சூத்திரங்களில்

ங்க், ஞ்ச், ண்ட், ந்த், ம்ப், ன்ற் ஆகிய இனவொற்றிணை;<br>
க்க், ச்ச், ஞ்ஞ், ண்ண், ய்ய், வ்வ் போன்ற தன்னிணை;<br>
ட்க், ற்க், ட்ச், ற்ச், ட்ப், ற்ப் ஆகிய வல்லொற்றிணை;<br>
ண்ஞ், ண்ம், ன்ஞ், ன்ம் ஆகிய மெல்லொற்றிணை;<br>
ய்வ், ர்வ், ல்வ், ழ்வ், ள்வ் போன்ற இடையொற்றிணை;<br>
ண்க், ண்ச், ண்ப், ன்க், ன்ச், ன்ப் ஆகியமெல்வல்லொற்றிணை;<br>
ஞ்ய், ண்ய், ண்வ், ங்ய், ம்ய், ம்வ்போன்றமெல்இடையொற்றிணை<br>
ய்க், ர்க், ல்க், ழ்க், ள்க் போன்ற இடைவல்லொற்றிணை;<br>
ய்ங், ய்ம், ர்ங், ர்ம், ழ்ங், ழ்ம் போன்ற இடைமெல்லொற்றிணை;<br>
ய்க்க், ர்ங்க், ய்ஞ்ச். ழ்ந்த் போன்ற மூவொற்றிணை;<br>
ஆகிய இணைகள் கொள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட மெய்ம்மயக்கங்களெல்லாம் தனிமொழிகளிலும் தொடர்மொழியினிடையிலும் நிகழ்பவை என்று இளம்பூரணர் கருதுகிறார். அதற்குக் காரணம் ங்ங், ங்ங், ண்ஞ், ர்ய், ண்ச், ன்ச், ண்வ், ர்ச், ள்ச், ய்ங், ய்ஞ் போன்ற

இணைகளுக்குச் சான்றுகளாகத் தனிமொழிகள் அவருக்குக் கிடைக்கவில்லை, ஆகவே தொல்காப்பியர் இருமொழியிடையில் வரும் இணையொற்றுக்களையும் சேர்த்து இங்குக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று எண்ணி, உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது, நிலம்வலிது முதலிய எழுவாய்த் தொடர்களையும், கட்சிறுர், வேய்ங்னம், கோல்வளை முதலிய வேற்றுமைத் தொகைகளையும், வெண்சாந்து, வெங்நோய், மென்ஞாண், இன்யாழ் முதலிய பண்புத் தொகைகளையும், செல்சிறுர், கொல்யானை முதலிய வினைத்தொகைகளையும் சான்றுகளாகக்காட்டுகிறுர்.

இம்மெய்ம்மயக்கங்களெல்லாம் தனிமொழிகளில் நிகழ்வனவே என்று நச்சினுர்க்கினியர் கருதுகிறுர். "ஆசிரியர் ஒருமொழியாமாறு ஈண்டுக் கூறி, இருமொழி புணர்த்திற்குப் புணரியலென்று வேருேர் இயலும் கூறி, அதன்கண் மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும்' என்று கூறினுர். கூறியவழிப்புன்னும்' உகரமொடுபுணரும்புள்ளியிறுதி' என்றும் பிருண்டும் ஈறுகள்தோறும் எடுத்தோதிப் புணர்ப்பர் ஆதலின் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டின் கூறியது கூறலென்னும் குற்றமாம். அதனுல் அவை காட்டுதல் பொருந்தாமை உணர்க" என்று தம் கருத்து வேற்றுமைக்குக் காரணம் காட்டி, இளம்பூரணரது கட்சிறுர், கற்சிறுர், உரிஞ்யாது, பொருந்யாது முதலிய சான்றுகளை ஏற்க மறுத்து விடுகிறுர்.

தமது கருத்துக்கு அரண்செய்யும் வகையில் உதாரணங்கள் காட்டுவதில் நச்சினுர்க்கினியர் மூன்று முறைகளைக் கையாள்கிறுர். முதலாவது இளம்பூரணர் காட்டும் இருமொழித் தொடர்களுக்குப் பதிலாகத் தனி மொழிகளை எடுத்துக்காட்டுகிறுர். உதாரணமாக இளம்பூரணது வெண்கலம், வெண்பலி, வேய்நீண்டது, வேய்மாண்டது,

வேர்நீண்டது, வீழ்நீண்டது ஆகியவற்றிற்குப் பதிலாக முறையே எண்கு, பண்பு, ஆய்நர், வாய்மை, ஆர்நர், ஆழ்நர் முதலிய தனிமொழிகளைக் காட்டுகிறார். 'ய்ஞ்ச்' என்ற மூவொற்றிணைக்கு 'தேய்ஞ்சது' என்ற பேச்சு வழக்கு உருவத்தையும் அவர் சான்றாகக் காட்டத் தயங்கவில்லை.

இவ்வாறு தனிமொழிகள் கிடைக்காத இணைகளுக்கு உதாரணம் காட்டுவதில் இரண்டாவது வழியொன்றைக் கையாள்கிறார். வினைத் தொகையையும் பண்புத் தொகையையும் ஒருமொழியாகக்கொண்டு அதற்கு ஆதாரமாக எழுத்ததிகாரத்தின் ஈற்றயல் சூத்திரத்திலுள்ள 'பண்பு தொகுமொழியும்...தொழில்தொகுமொழியும் ... மருவின் பாத்திய; புணரியல் நிலையிடையுரைத்தோன்று'' என்ற கருத்தைக்கொள்கிறார். எனவே ன்ஞ், ர்ய், ழ்ய் ண்ய், ண்வ் போன்ற மெய்ம்மயக்கங்களுக்கு முறையே மென்ஞாண், போர் யானை; வீழ்யானை, மண்யாறு, இன்யாழ், எண்வட்டு போன்றபண்புத்தொகை, வினைத்தொகை ஆகியவைகளையும் சான்றுகளாகக் காட்ட வேண்டிவருகிறது. காய்ம்புறம், நேர்ஞ்சிலை போன்ற சான்றுகளில் தொகைச்சொற்களிடையில் இனமெல்லெழுத்து மிகுதலையும் காண்கிறோம்.

இத்தொகைச்சொற்களும் சான்றுகளாகக் கிடைக்காத மெய்ம்மயக்கங்களுக்கு மூன்றாவதாக ஒருவழியை மேற்கொள்கிறார் நச்சினார்க்கினியர். உதாரணமாக ஞ்ய், ந்ய், ம்ய், வ்ய், ம்வ் போன்ற இணைகளுக்குச் சான்றுகள் 'இக்காலத்து இறந்தன' என்றும் 'இக்காலத்து வழங்குமெனின் உணர்க' என்றும் எழுதுகிறார். "இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து...ஒரு மொழிக்கண்ணே மயங்குவனவும் உளவாகலின் அவற்றைக் கண்டு இலக்கணம் கூறி

ஞர். அவை பின்னர் இறந்தன என்று ஒழித்து உதாரணம் இல்லனவற்றிற்கு உதாரணம் காட்டாமற்போதலே நன்று என்று கூறலும் ஒன்று'' என்று தாம் மேற்கொள்ளும் முறைக்கு விளக்கம் கொடுத்து அமைதியும் கண்டுகொள்கிருர்.

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

### I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக் கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

### II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | களுநால் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாக யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சன தீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப் பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பக மூலமும் உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினு விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகை திருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானமிர்தக் கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 33. | உவமான சங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 57. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 65. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |
| 72. | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் | — | 2 | 0 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு விதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

---

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள், திரு. பி. டி. இராசன் (B. A, Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.